பட்டிருக்கின்றன. குடும்பக் கார்டு என்பதை ஒரு பாஸ் புத்தகம் மாதிரி கொடுத்து அதிலே முழு விவரங்களையும் தருகின்ற அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதிய அட்டைகள் வழங்குவதன் மூலம் எல்லோருக்கும் கார்டுகள் கிடைக்கின்ற வகையிலேயும் போலி கார்டுகளை நீக்குகின்ற வகையிலேயும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறி, கருத்துக்களை எடுத்துச்சொல்லிய உறுப்பினர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) கூடுதல் மானிய கோரிக்கைகள் 1981-82—விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981-82-ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

"In pursuance of Article 203, clause (3) of the Constitution of India I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1981-82."

கூடுதல் மானியக் கோரிக்கைகள் 1981-82—விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981-82ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்கள் மீது விவாதம் தொடங்க இருக்கின்றது. இன்னும் சரியாக 128 நிமிடங்கள் தான் இருக்கின்றன. எல்லா கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று பெயர்களைத் தந்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி உட்பட அவர்கள் அத்தனைபேரும் ஒவ்வொருவரும் 10 நிமிட நேரத்திற்குள்ளாக தமது உரைகளை முடித்துக கொள்ள வேண்டும். அப்போதுதான் அமைச்சரவர்கள் $12\frac{3}{4}$ மணிக்கு பேச ஆரம்பித்து ஒரு மணிக்கு ஓட்டெடுப்பு நடத்தி முடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நாகர்கோவிலில் பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் பாயிண்ட் ஆஃப் ஆர்டராக வராது. கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுங்கள். அடுத்து திரு. ரகுமான்கான் அவர்களை பேச அழைக்கிறேன்.